**மீன்பிடி வெகுமதி நிதியம் - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீன்பிடி வெகுமதி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வள சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிதியத்தில் ரூபா 9,968,225 ஆன காசு மீதியில் வெகுமதியாளர்களுக்கு செலுத்த வேண்டிய பரிசுத் தொகை மற்றும் அதற்குரிய அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு காண்பிக்கப்பட்ட போதும் ரூபா 2,955,290 ஆன வெகுமதியாளர்களுக்கு செலுத்த வேண்டிய படிகள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 7,012,935 ஆன மீதிக்குரிய வெகுமதியாளர்களுக்கும், அரசாங்கத்துக்கும் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு செலுத்த வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீனவர் வெகுமதி நிதியத்தில் இதுவரை குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாத மீதிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். காசு மீதியில் காணப்படுகின்ற அரசிறைகள் நிதி நிலைமைக் கூற்றில் செலுத்த வேண்டியதாக தனியாக கணக்கு வைப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | வெகுமதியாளர்களுக்கும் அரசாங்கத்துக்கும் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் குறித்துரைத்தவாறு இனங்கண்டு செலுத்த வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வழக்குப் பொருட்கள் விற்பனையால் கிடைத்த பணம் | 580,187 | 375,740 | 204,447 | அறிக்கை சரியாக தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீதிகள் நேரொத்த அறிக்கையுடன் இணக்கம் செய்து சரியாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,600,080 ஆன மீனவர் வெகுமதி நிதியம் மற்றும் ரூபா 2,955,290 ஆன உத்தியகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 12,555,370 ஆக இருந்த போதும் நிதியக் கணக்கில் காசு மீதி ரூபா 9,968,225 ஆனமையால் ரூபா 2,587,145 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய சரியான நிதிப்பெறுமதி இனங்கண்ட பின்னர் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய சரியான நிதிப்பெறுமதி இனங்காணப்படல் வேண்டும். |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1996 இன் (அ) 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீர்தேக்க வளங்கள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவு | (அ) | வெகுமதி நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக பணிப்பாளர் நாயகம் பொறுப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டிய போதிலும் மீன்பிடி மற்றும் நீர்தேக்க வளங்கள் திணைக்கத்தால் 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் | வருடாந்தம் திணைக்களத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது மீனவர் வெகுமதி நிதியத்தின் பணிகள் இனங்கண்டு அவற்றை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கா | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை தொடர்பாக சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளல் அதிகரிப்பதற்கும் வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்காக திட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களில் வெகுமதி பணிகளை இனங்கண்டு ஆக்கபூர்வமானதாக நிறைவேற்றுவதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சுற்றிவளைப்புக்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட முறையில் வழக்குகள் 348, 488, 427, 327, 604, 536, 692, 293 மற்றும் 719 தொடரப்பட்டிருந்தது. எனினும் 2017, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது சுற்றிவளைப்புக்கள் மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எந்தவொரு வெகுமதி தொகையும் செலுத்தப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட 719 வழக்குகளில் 03 வழக்குகளுக்குரிய சுற்றிவளைப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட வெகுமதித் தொகை ரூபா 250,165 ஆகும். கடந்த ஆண்டுக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 9,848,765 தொகையில் எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போது வெகுமதியாளர்களுக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணம் வழங்குவதற்காக விரைவாக திட்டம் முறைமையொன்று தயாரிக்கப்படாமையின் காரணமாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை சுற்றிவளைப்பதற்காக உத்தியோகத்தர்களை ஊக்கிவித்தல் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தகவல்களைப் பெற்று விரைவாக ஊக்குவிப்புப் படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெகுமதிப் பணத்தை வழங்குவதற்காக விரைவாக திட்டமுறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 372,570 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,637,671 ஆகும். ஆதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,265,101 வீழ்ச்சி காணப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனையால் கிடைத்த வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கிடைக்க வேண்டிய அரசுடமையாக்கப்பட்ட மீன் விற்பனை வருமானம் ரூபா 2,749,153 ஆக இருந்ததுடன் அதில் கடந்த ஆண்டுக்குரிய நிலுவைப்பணம் ரூபா 1,839,060 ஆகும். 2023 ஆம் ஆண்டிற்காக அரசுடமையாக்கப்பட்ட மீன் விற்பனையால் ரூபா 580,187 மாத்திரம் வெகுமதி நிதியத்துக்கு கிடைத்திருந்ததுடன் கடந்த ஆண்டிற்குரிய எந்தவொரு நிலுவைத் தொகையும் மீளாய்வாண்டில் கிடைத்திருக்கவில்லை. இதன் பிரகாரம் நிதியித்தில் நிலுவை வருமானத்தை அறவிடுதல் நலிவான நிலைமையில் காணப்பட்டது. | இந்த கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த நிலுவை வருமானத்தை சேகரித்தல் காலதாமதம் இன்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ | 2023 ஆம் ஆண்டில் சகல மாவட்டங்களிலும் மாவட்ட மீன்பிடி அலுவலகங்களின் ஊடாக 719 வழக்குகள் தொடரப்பட்டிருந்தது. 04 மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் மாத்திரம் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனை வருமானம் வெகுமதி நிலையத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் ஏனைய மாவட்ட மீன்பிடி அலுவகங்களில் இருந்த ஒன்றிலிருந்தும் வெகுமதி நிலையத்திற்கு பணம் கிடைக்காமை தொடர்பாக முகாமைத்துவத்தால் கவனம் செலுத்தப்பட்டிருந்நதமை வெளிப்படுத்தப்படவில்லை. | மீன்பிடி வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கக்கூடிய பணம் இருக்குமாயின் அவற்றை மீண்டும் பெற்று சுற்றிவளைப்புக்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனைக் கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. | வழக்குகள் முடிவடைந்த பின்னர் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையை துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | முடிவடைந்த வழக்குகளுக்குரிய நீதிமன்றங்களில் வைப்புச் செய்யப்பட்ட பணம் மாவட்ட மீன்பிடி அலுவலகங்களுக்கு அறிவித்து அந்த வருமானத்தை விரைவாக | இதற்காக சகல மாவட்ட உதவி பணிப்பாளர்களினாலும் அது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வழக்குகளுக்குரிய வைப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மாவட்ட மீன்பிடி அலுவலகத்தால் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக கைப்பற்றுவதற்காக களப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு குறித்துரைத்த மதிப்பீடு தயாரித்து அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு செயற்பட வேண்டியிருந்த போதிலும் நிதியத்தால் அந்த மதிப்பீடு தயாரித்து உரிய இலக்கை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தது. | மாவட்ட மீன்பிடி அலுவலக மட்டத்தில் சுற்றிவளைப்புகள் மற்றும் களப்பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் மாவட்ட அலுவலகங்களிலும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அறிக்கையிடப்படுகின்ற பிரதேசங்களில் அந்த சட்டவிரோத நடவடிக்கைகளை சுற்றிவளைப்பதற்காக சுற்றிவளைப்புக்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வழக்கு தொடரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்த மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்காக மதிப்பீடு தயாரித்து இலக்குகள் அடையப்படல் வேண்டும். |
| (உ) | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது இலங்கைக் கடற்படையினால் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் ஒற்றர்கள் ஊடாக செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களும் மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் களப்பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களும் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். ஆந்த வெகுமதியாளர்களை இனங்கண்டு இயலுமான வகையில் பதிவேடுகளுக்கு கொண்டுவந்து விரைவாக செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான ஆவணப்படுத்தல்களை மேற்கொள்ளாதிருந்ததுடன அந்த வெகுமதிகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவித்து சட்டவிரோத சுற்றிவளைப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் செயற்பட்டிருக்கவில்லை. மேலும் 1996 இன் 02 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீர்த்தேக்க வளங்கல் சட்டத்தின் 59(1) ஆம் பிரிவின் கீழ் இந்த நிதியம் | ஆவணம் ஒன்றை பேணிச் செல்லுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றிவளைப்பிற்குரிய சகல விபரங்களையும் உள்ளடக்கிய பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்படல் வேண்டும். |

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் சுற்றிவளைப்பிற்காக உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற முறையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டில் இருந்து அமுல்படுத்தப்படுகின்ற வழக்குத் தொடர்பாக விபரங்களும் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் திணைக்களத்தின் சட்டப்பிரிவுக்குரிய வழக்கு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் முன்னைய ஆண்டுகளில் இருந்து அமுல்படுத்தப்படுகின்ற வழக்குகள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக தெளிவான விளக்கம் ஒன்று கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் அந்த விபரங்கள் உரிய பிரகாரம் பேணிச் செல்லாமையினால் செயலாற்றுலை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது. | தற்போது google sheet ஊடாக தரவுகள் பெறுகின்றமையால் 2024 இன் செயலாற்றல் அறிக்கையில் அமுல்படுத்தப்படுகின்ற சகல வழக்குகளையும் உள்ளடக்கப்படும் என மேலும் அறியத்தருகின்றோம். | வழக்கு தொடர்பான சகல விபரங்களும் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாவட்ட மீன்பிடி அலுவலகங்களினால் தொடரப்பட்டுள்ள வழக்குகள், செயற்பாட்டிலுள்ள வழக்குகள், அந்தந்த அலுவலகங்களில் கைப்பற்றப்பட்டுக் காணப்படுகின்ற பொருட்கள், நீதிமன்றங்களில் காணப்படுகின்ற பொருட்கள், முடிவடைந்த வழக்குகளில் வெகுமதி நிலையத்தில் கிடைக்க வேண்டிய பணம் தொடர்பான தகவல்கள் மீன்பிடி மற்றும் நீர்வழங்கள் திணைக்கத்தால் நாளது | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளின் சுற்றிவளைப்புக்களில் மற்றும் வழக்குத் தொடர்வதன் மூலம் நிதியத்ததுக்கு கிடைக்க வேண்டிய பணம் தொடர்பான விபரங்கள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்குகள் மற்றும் வழக்குகளில் இருந்து வெகுமதி நிதியத்துக்கு கிடைக்க வேண்டிய பணம் தொடர்பான சகல விபரங்களும் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

வரையாக பேணிச்செல்லப்படாமையினால் மீன்பிடி வெகுமதி நிலையத்தின் செயலாற்றல் அறிக்கை மூலம் சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்தமை கண்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது.